# பத்திரிகைச் செய்தி

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இராணிப்பேட்டை மாவட்டம் , வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் இயங்கும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (One Stop Centre) (24X7) வழக்குப் பணியாளர் பணியிடம் –1 (Case Worker) பாதுகாவலர் பணியிடம் –1 (Security) என 2 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது மேற்படி வழக்குப் பணியாளர் மற்றும் பாதுகாவலர் பணியிடத்திற்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நேரடியாக வரவேற்கப்படுகின்றன.

வழக்குப் பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருப்பது அவசியம்:

1.பெண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

2.இளங்கலை பட்டப்படிப்பு –(Social Work, Counselling, Psychology or Development Management) கல்வித் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

3.ஒரு வருட முன் அனுபவம் (பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தொடர்பாக தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் ஆலோசனை வழங்குதல் போன்ற முன் அனுபவம் பெற்ற பெண் விண்ணப்பதாரராக இருத்தல் அவசியம்.)

4. வயது வரம்பு – 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

5.வெளிமாவட்ட விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம். இராணிப்பேட்டை மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. மாத ஒப்பந்த ஊதியம் ரூபாய்.18,000 வழங்கப்படும்.

பாதுகாவலர் பணியிடத்திற்கு விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருப்பது அவசியம்:

1.பாதுகாவலர் பணியில் குறைந்த பட்சம் 2 வருடங்கள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (அரசு அல்லது தனியார் துறையில்)

2. பெண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. மாத ஒப்பந்த ஊதியம் ரூபாய்.12,000 வழங்கப்படும்.

தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் இணையதள முகவரியில் (https://**ranipet.nic.in/**) விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தினை நிரப்பி கீழ்க்கண்ட முகவரியில்

மாவட்ட சமூகநல அலுவலகம்
4வது தளம், சி பிளாக்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
இராணிப்பேட்டை மாவட்டம்.

நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 19.01.2026 க்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

31/12/25

மாவட்ட ஆட்சித் தலைவர்
இராணிப்பேட்டை மாவட்டம்

2/2